<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 552 /2021 நாள்: 09.09.2025 வா.சா.2 – லோகநாதன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி மகாலிங்கம் எனது தம்பி. மேற்படி உறவுமுறையை எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தும்பலப்பட்டியில் வசித்து வருகிறேன். வாதி மகாலிங்கம் உடுமலைபேட்டை, USS லேஅவுட்டில் வசித்து வருகிறார். வாதி குடியிருக்கும் இடத்திற்கும், நான் குடியிருக்கும் இடத்திற்கும் இடையே 10 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். வாதி மாடர்ன சொட்டுநீர் பாசன கருவிகள் விற்கும் கடையை உடுமலைபேட்டையில் நடத்தி வருகிறார். நான் அதில் பங்குதாரர் இல்லை. வாதி மகாலிங்கம் யார், யாரோடு வரவு செலவு வைத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. மகாலிங்கம் பைனான்ஸ் சீட்டு பண தொழில்களை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மகாலிங்கம், கோவிந்தராஜுக்கு கடன் தொகையை கொடுத்தார். மேற்படி மகாலிங்கம் 2017 ம் வருடம் கோவிந்தராஜுக்கு வங்கி மூலமாக பணபரிமாற்றம் செய்து கடன் கொடுத்தார். மேற்படி கடனை எந்த தேதியில் கொடுத்தார் என்று தற்போது ஞாபகம் இல்லை. ரூ.20 லட்சத்தை பணபரிமாற்றம் செய்து கடன் கொடுத்தார். ரூ.10 லட்சம் இரண்டு தவணையாக பணபரிமாற்றம் செய்தார். மேற்படி கடன் தொகைக்கு கோவிந்தராஜ் 4 காசோலைகளை வாதிக்கு வழங்கினார். மேற்படி காசோலைகளை கோவிந்தராஜ், மகாலிங்கம் கடையில் வைத்து கொடுத்தார். மேற்படி கடன் தொகையை திரும்ப மகாலிங்கம் கேட்ட பிறகு கொடுக்காததால் பின்னிட்டு மேற்படி காசோலையை கோவிந்தராஜ்,

மகாலிங்கத்திடம் கொடுத்தார். பணம் கொடுத்த பிறகு 3 முதல் 4 மாதங்கள் கழித்து கோவிந்தராஜ் காசோலையை மகாலிங்கத்திற்கு கொடுத்தார். எந்த வங்கி காசோலைகளை மகாலிங்கத்திற்கு கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. மேற்படி கடன் தொகையை கோவிந்தராஜ் பெற்ற காலத்தில் உடுமலைபேட்டை, சிக்கந்தர் பாட்சா வீதியில் கோவிந்தராஜ் குடியிருந்து வந்தார். காசோலை கொடுத்த பிறகு 2 மாதத்திலேயே கோவிந்தராஜ் காலமாகிவிட்டார். மேற்படி கோவிந்தராஜ் காலமான பிறகு கோவிந்தராஜ் மகனிடம் நானும், மகாலிங்கமும் போய் கடன் தொகையை கேட்டோம். மேற்படி கேட்ட தேதி தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் மகாலிங்கத்திடம், கோவிந்தராஜ் ரூ.20 லட்சம் கடன் வாங்கவே இல்லை என்றால் சரியல்ல. சீட்டு தொகையை மகாலிங்கத்திடமிருந்து கோவிந்தராஜ் பெற்றது தான் மேற்படி ரூ.20 லட்சம் என்றால் சரியல்ல. மேற்படி சீட்டு நடவடிக்கைக்கு 4 காசோலைகளை கோவிந்தராஜிடம் இருந்து மகாலிங்கம் பெற்று வைத்திருந்தார் என்றும், அதை பயன்படுத்தி கோவிந்தராஜ் காலமான பிறகு வாதி பொய் வழக்கு போட்டுள்ளார் என்றால் சரியல்ல. வாதி எனது உடன்பிறந்த சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/-M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.